07.01.2025 அ.வ. எண். 137/2016 வா.சா.1 வினாயகமூர்த்தி

2, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் தகப்பனார் பெயர் பழனிவேல். என் தகப்பனாருக்கு நான், 2ம் வாதி மற்றும் காமாட்சி ஆகியோர்கள் வாரிசுகள். என் தாத்தா பெயர் லட்சுமணன். லட்சுமணனும், அயிலுவும் பங்காளிகள். அயிலுக்கு கோவிந்தசாமி, ரங்கநாதன் மற்றும் 5 மகள்கள் என்றால் மகன்கள் மட்டும் தான் தெரியும், மகள்கள் தெரியாது. என் தகப்பனார் பெயரிலும், ரங்கநாதன், கோவிந்தசாமி பெயரிலும் முதலில் வழக்கு தாக்கல் செய்தேன். என் தகப்பனாரும் இறந்துவிட்டார், கோவிந்தசாமியும் இறந்துவிட்டார். என் அம்மா, சகோதரி இருக்கிறார்கள். என் தாயார் பெயர் மல்லிகா. என் தாயாரையும், சகோதரியையும் வழக்கில் சேர்க்கவில்லை. கோவிந்தசாமி வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளேன். கோவிந்தசாமியின் பேத்தி பெயர் லாவண்யா, அவர் இறந்துவிட்டார். லாவண்யா வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளேன். பாகம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 32 x 79 சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தவிர மற்ற பூர்வீக சொத்துக்களை சேர்க்கவில்லை. தாவா சொத்து புளியரம்பாக்கம் கம்மவார் தெருவில் உள்ளது என்றால் சரிதான். கம்மவார் தெருவை பார்த்து தான் 32 அடி அகலம் உள்ளது. என் தகப்பனார் எனக்கும், 2ம் வாதிக்கும் 16 x 79 க்கு வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளார். சரிபாதியை எழுதியுள்ளார். சரிபாதியை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். ரங்கநாதன், அவருடைய மகன்கள் வேலு, சக்திவேல் வீடுகட்டியுள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் செக்குபந்தி குறிப்பிட்டு வா.சா.ஆ.1 எழுதவில்லை. கோவிந்தசாமிக்கு பாகமாக வந்த சொத்தை ரங்கநாதனுக்கு செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்றால் சரிதான். கம்மவார் தெருவில் ரோடில் இருந்து வரும்போது முதலில் கோவிந்தசாமிக்கும், அதற்கு அடுத்து ரங்கநாதனுக்கும், அதற்கு அடுத்து என் தகப்பனாருக்கும் பாகமாக ஒதுக்கினார்கள் என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு வந்த பாகத்தில் ஆலோபிளாக் கல் போட்டு வீடுகட்டி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா

சொத்திற்கு மேலாண்டை பக்கம் 3 அடி வழி உள்ளது என்றால் இல்லை. கம்மவார் தெருவில் வரும்போது முதலில் வேலு வீடுகட்டியுள்ளார். அதற்கு பக்கத்தில் 2ம் பிரதிவாதி ரங்கநாதன் வீடுகட்டியுள்ளார். அதற்கு அடுத்து சக்திவேல் வீடுகட்டியுள்ளார். ரங்கநாதன் வீட்டிற்கு மேல்மாடியில் மற்றொரு மகன் ஆறுமுகம் வீடுகட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ரங்கநாதன் வீடுகட்டி 15 ஆண்டுகள் இருக்கும். வேலு, சக்திவேல் வீடுகட்டி 3 ஆண்டுகள் இருக்கும். அவரவர்கள் வீடுகட்டி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார்கள். நான் செய்யாரில் என் தாத்தா வீட்டில் இருக்கிறேன். என் தம்பி சென்னையில் வேலையில் இருக்கிறார், அவர் குடும்பமும் சென்னையில் தான் உள்ளது. கோவிந்தசாமி ரங்கநாதனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியும். என் தந்தை இறந்தபிறகு தான் கோவிந்தசாமி ரங்கநாதனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியவந்தது. வழக்குரையில் கோவிந்தசாமி ரங்கநாதனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு சொத்தை எழுதி வைத்துள்ளார் என்று தெரியாது. 1/3 பாகத்தை தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும் வழக்கிற்காக எவ்வளவு சொத்து எழுதிவைத்தார் என்று தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் வேலை பார்க்கவில்லை. சலவை தொழில் செய்து வருகிறேன். ரங்கநாதன் மகன்கள் வீடு கட்டியபோது நாங்கள் ஆட்சேபனை செய்தோம், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. ரங்கநாதன் அவருடைய பாகத்தில் தான் வீடு கட்டினார். ரங்கநாதன் பாகத்தில் தான் அவருடைய மகன் வீடு கட்டியுள்ளார் என்றால் என் பாகத்தையும் சேர்த்து வீடு கட்டியுள்ளார். வீடு கட்டியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா எழுதிவைத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ஒப்புக்கொள்ளவில்லை. எனக்கு 38 வயதாகிறது. ரங்கநாதன் வீடுகட்டியபோது எனக்கு சிறு வயது. எனக்கும் ரங்கநாதனுக்கும், அவருடைய

மகன்களுக்கும் பல வருடங்களாக விரோதம் என்றால் சரியல்ல. ரங்கநாதன், கோவிந்தசாமி பாக சொத்துக்களில் வீடுகட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றும் எங்களுக்குள் உள்ள விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாகமாக வந்த சொத்தை நாங்கள் அனுபவிக்கிறோம் என்றும், அவர்களுக்கு பாகமாக வந்த சொத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்றும் புளியரம்பாக்கம் கிராமத்தில் சொத்துக்களின் மதிப்பு இலட்சக்கணக்கில் உயர்ந்து விட்டதால் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் பழனிவேலுக்கும், அயிலு என்பவருக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள். பழனிவேலும், அயிலுவும் எந்த பாகப்பிரிவியையும் செய்து கொள்ளவில்லை. பழனிவேல் இறந்துவிட்டார். 3ம் பிரதிவாதியும் இறந்துவிட்டார். 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் 4, 5, 6 பிரதிவாதிகள். ஸ்ரீராமலு மகள் தான் லாவண்யா. லாவண்யாவும் இறந்துவிட்டார். லாவண்யா மகன்கள் தான் 8, 9 பிரதிவாதிகள். கோவிந்தசாமியின் வாரிசுகள் என் அடிப்படையிலும், லாவண்யாவின் வாரிசுகள் என்ற அடிப்படையிலும் 8, 9 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை

இல்லை.